# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 12.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 14503/SCIC/2023**

திரு V. சுந்தரமூர்த்தி மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), ... பொது அதிகார அமைப்பு
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை 623 560

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 04.05.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிவகங்கை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். பரமக்குடி வண்ணியர் உறவின் முறைகளின் பொது சபை தொடர்பாக 21 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 29.05.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 19.06.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து மனுதாரர் 10.08.2023 தேதியிட்டு

சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 14503/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 25.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 13.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 12.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திருமதி மு. மீனாள், சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிவகங்கை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் 29.05.2023, மற்றும் 25.10.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு இனவாரியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 13.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மேலும், பொதுத் தகவல் அலுவலரால் தற்போது 05.06.2025 தேதியிட்டு இனவாரியான தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் இனம் 1 குறித்து பொதுத் தகவல் அலுவலரால் முதலில் தனக்கு வழங்கப்பட்ட தகவல்களில் தான் கோரிய நீதிமன்ற ஆணை தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் தற்போது அனுப்பப்பட்ட பதிலில் மேற்படி நீதிமன்ற ஆணையினைப் பெறுவதற்கு உரிய கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு, இதில் தனக்கு முரண்பாடான தகவல்கள் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிவித்தார். மனுதாரரின் வாதத்தினை ஆணையம் ஏற்கிறது.

6. எனவே, **அலுவலக ஆவணங்களை ஆய்வுசெய்யாமல் 29.05.2023 தேதியிட்டு மனுதாரருக்கு முரண்பாடான தகவல்கள் வழங்கிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு இரா. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), சிவகங்கை என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

7. மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய தனது ஒரே ஒரு மனுவில் 21 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார். அம்மனுவில் கோரியுள்ள அனைத்து தகவல்களையும் வழங்குவதால் பொதுத் தகவல் அலுவலரின் அன்றாடப்பணிகள் பெருமளவில் பாதிக்கப்படக்கூடும் என்பதை ஆணையம் மனுதாரருக்கு எடுத்துரைக்கிறது.

மாண்பமை உச்சநீதிமன்றம் **Central Board of Secondary Education and Anr -Vs- Aditya Bandopadhyay and Ors {Civil Appeal No.6454 of 2011 dt.09-08-2011)** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

*" The Act should not be allowed to be misused or abused, to become a tool to obstruct the national development and integration, or to destroy the peace, tranquillity and harmony among its citizens. Nor should it be converted into a tool of oppression or intimidation of honest officials striving to do their duty. The nation does not want a scenario where 75% of the staff of public authorities spends 75% of their time in collecting and furnishing information to applicants instead of discharging their regular duties. The threat of penalties under the RTI Act and the pressure of the authorities under the RTI Act should not lead to employees of a public authorities prioritizing 'information furnishing', at the cost of their normal and regular duties."*

*(நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கவோ, அல்லது நாட்டின் குடிமக்களின் அமைதி மற்றும் ஒற்றுமைக்கு ஊறு செய்ய வகை செய்யும் ஒரு கருவியாகவோ தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. அதேபோல், அரசின் நேர்மையான அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் அழுத்தம் கொடுக்கவோ அல்லது அவர்களை பயமுறுத்தி, அச்சுறுத்திப் பணிய வைக்கும் ஒரு கருவியாகவோ இச்சட்டத்தை மாற்றுவதை அனுமதிக்க முடியாது. பொது அதிகார அமைப்பின் **75** சதவிகிதப் பணியாளர்கள் தங்களின் பணி நேரத்தில் **75** சதவிகிதத்தைத் தங்களின் அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு செலவழிக்காமல், தகவல்களை சேகரிப்பதற்கும், அத்தகவல்களைக் கொடுப்பதற்குமே செலவழிக்கும் ஒரு நிலையை நாடு விரும்பவில்லை. தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தண்டனை கிடைத்துவிடுமோ என்ற பயத்திலோ அல்லது அழுத்தத்தின் காரணமாகவோ, தங்களுடைய அன்றாட வேலைகள் பாதிக்கின்ற வகையில் தகவல் வழங்குவது ஒன்றையே பணியாகக் கொள்கின்ற நிலைக்கு பொதுத் தகவல் அலுவலர்கள் தள்ளப்பட்டுவிடக்கூடாது என்றும், அது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கமுமல்ல என்றும் மேற்கூறிய உச்சநீதிமன்ற தீர்ப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.)*

8. மேற்குறிப்பிடப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பானது இவ்வழக்கிற்கும் சாலப்பொருந்தும் என்பதை ஆணையம் மனுதாரருக்கு சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிவித்ததால், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் **இனங்கள் 1,3,4,7,8,9,12,13,14 ஆகியவற்றில் கோரிய ஆவண நகல்களை 15 தினங்களுக்குள் கட்டணமின்றி இலவசமாக ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினை ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.** மற்ற இனங்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் ஏற்கிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 14503/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை 623 560

திரு இரா. கிருஷ்ணமூர்த்தி,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை 623 560

**<u>மனுதாரர்:-</u>**
திரு V. சுந்தரமூர்த்தி,
த/பெ வேலுச்சாமி,
8/195, A, கண்ணகி தெரு,
பரமக்குடி 623 707

**நகல்**
பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028.

Copy to: File TK/PS